வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க. எண். 4251 /ஆ2/2024 நாள் :25.10.2024

பொருள்: பள்ளிக்கல்வி –திட்ட ஆண்டு 2024–2025 –PM YASAVI CENTRAL SECTOR SCHEME OF TOP CLASS SCHOOL EDUCATION–OBC,EBC and DNT இனத்தை சார்ந்த 9 மற்றும் 11 ஆம் வகுப்பு கல்வி உதவித்தொகை பெறத் தகுதியான மாணவ /மாணவியரின் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் National Scholarship Portal இணையதளத்தில் புதிதாக பதிவேற்றம் மற்றும் Renewal செய்யும் பணிகளை 28.10.2024–க்குள் முடிக்க தெரிவித்தல் –சார்பு

பார்வை: 1.வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.4/24909/2024 நாள் 21.10.2024

========

பார்வையில் காணும் வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின் படி 2024 –25 ஆம் ஆண்டு PM YASAVI CENTRAL SECTOR SCHEME OF TOP CLASS SCHOOL EDUCATION – OBC , EBC and DNT இனத்தை சார்ந்த இணைப்பில் உள்ள பள்ளிகளில் 9 மற்றும் 11 ஆம் வகுப்பு பயிலும், கல்வி உதவித்தொகை பெறத் தகுதியான மாணவ /மாணவியரின் விண்ணப்பங்களை ஆன்லைன் மூலம் National Scholarship Portal இணையதளத்தில் புதிதாக பதிவேற்றம் செய்யவும் மற்றும் கடந்த நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த மாணவ/மாணவியர்கள் புதுபித்தல் (Renewal) செய்யும் பணிகளை 28.10.2024க்குள் ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்யப்படவேண்டும் என சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. இதர பிற்படுதப்பட்டோர் (OBC), பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள்(EBC), சீர்மரபினர் (DNT) பிரிவில் இருத்தல் வேண்டும்.
2. மாணவ /மாணவியரின் பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு ரூ2.50 லட்சம் ஆகும்.
3. இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் முறையே 8 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் 60 சதவீதம் மற்றும் அதற்கும் அதிகமாக மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.
4. இத்திட்டதின் கீழ் மாணவர்கள் விண்ணப்பிக்க கடைசி நாள் 28.10.2024

இப்பணி குறித்து இனிவரும் காலங்களில் ஏதேனும் புகார் பெறப்பட்டால், அப்பள்ளித் தலைமையாசிரியர்களே முழுப்பொறுப்பேற்க நேரிடும் என்பதை திட்ட வட்டமாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் பள்ளிகள்) 29.10.2024 அன்று பள்ளிகள் வாரியாக பதிவுகள் மேற்கொண்ட விவரத்தினை இவ்வலுவலக ஆ2 பிரிவில் சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :

1. பள்ளிகளின் பெயர் பட்டியல்
2. NSP இணைய வழியில் மாணவர்கள் பதிவுகள் மேற்கொள்ள வழிகாட்டு காணொளி

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
சார்ந்த உயர் /மேல்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள் முதல்வர்கள் வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல்
வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் பள்ளிகள்) தொடர் நடவடிக்கையின் பொருட்டு(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

Scanned with OKEN Scanner